# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஏப்பிறல் மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ- (கூட்டி.) 16/2006

### கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகத்தினைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்

"கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம்" என அழைக்கப்படு வதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்க ளால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப் பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக் கத்துக்கென, இதற்கு முன்னர் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும்: முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களான அல்லது இத்தால் அமைத் துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகையோ ரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாப னம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) " கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு வழக்குத் கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

2-PL 003014 -1,075 (2008/06)

தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண் டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் எந்தப் பொதுக்குறிக்கோள்களுக்காக அமைக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வரு மாறு இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின் றது :-

(அ) ஏனைய மதங்களை அனுசரிப்பதற்கும் கடைப்பிடிப் பதற்கும் பங்கமின்றி பௌத்த சாசனத்தைப் பாது காத்தலும் பேணி வளர்த்தலும் ;

(ஆ) பௌத்தர்களிடையே ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் ஊக்குவித்தலும் இளம் சமுதாயத்தினை தீய பழக்க வழக்கங்களிலிருந்து பாதுகாத்தலும் ;"

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களை யும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறை வேற்றவும், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் செயற்படுத்தவும் மற்றும் முடிவுறுத்தவும் 6ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணத்தைக் கடனெடுப்ப தற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளாளர்களையும் ஈடுபடுத்தவும் தொழிலுக்கமர்த்தவும், வேலைக்கமர்த்தவும், வேலையிலிருந்து நீக்கஞ்செய்யவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் பதவி தாங்குநர்களையும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கிணங்கத் தெரிவு செய்யப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான வேறு உறுப்பினர்களையும் கொண்ட முகாமைக் குழுவொன் றினால் இச்சட்டத்தினதும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் கழகத்தின் நிறைவேற்று சபையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் விதிகளின்கீழ் புதிய முகாமைக் குழுவொன்று தெரிவுசெய்யப்படும்வரை பதவி வகித்தலும் வேண்டும்.

விதிகள்.

**6.** (1) காலத்துக்குக்காலம், ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும் உறுப்பினர்களைச் சேர்த்தல், பதவி விலகல் அல்லது விலக்குதல் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனத்தினதும் முகாமைக் குழுவினதும் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் அதன் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் பொதுவாக கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக் குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அத்தகைய விதிகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படக் கூடிய விதியொன்று அதே முறையில் மாற்றப்படலாம், அவற் றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப் படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இதற்காக அல்லது இதனகத்துப் பின்னர் கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்படைப்பணம், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகித்தல், புரிதல், மற்றும் நிறைவேற்றுதலில் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினங்களையும் ஈடுசெய்வதற்குத் தேவையான எல்லாப் பணத் தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழு கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று.

என்று பொருள்படும்.

*கழகத்தினால் செலுத்தப்பட வுள்ளனவும் கழகத்திற்குச் செலுத்தப்படற் பாலனவையு மான கடன்கள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று உளதாயிருக்கும் கழகத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத் தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அந் நாளன்று கழகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத் தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றது மான ஆதனத்தை வைத்திருக்க லாம்.*

**10**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்ற வகையில் அல்லது வேறுவகையில் அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத் தாபனத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் முகாமைக் குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசினதும் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*